## திருமங்கையாழ்வார் அருளிச் செய்த
## பெரிய திருமொழி
## ஐந்தாம் பத்து

### ஆறாம் திருமொழி - கைம்மானம்
### திருவரங்கம் 3

** கைம்மான மழகளிற்றைக் * கடல் கிடந்த கருமணியை *
மைம்மான மரதகத்தை * மறை உரைத்த திருமாலை **
எம்மானை எனக்கு என்றும் இனியானைப் * பனி காத்த
அம்மானை * யான் கண்டது * அணிநீர்த் தென்னரங்கத்தே 1

** பேரானைக் * குறுங்குடி எம்பெருமானை * திருத்தண்கால்
ஊரானைக் * கரம்பனூர் உத்தமனை ** முத்திலங்கு
காரார் திண்கடல் ஏழும் * மலை ஏழு இவ்வுலகு ஏழுண்டும் *
ஆராதென்று இருந்தானைக் * கண்டது தென்னரங்கத்தே 2

ஏனாகி உலகு இடந்து * அன்று இருநிலனும் பெரு விசும்பும் *
தானாய பெருமானைத் * தன்னடியார் மனத்து என்றும் **
தேனாகி அமுதாகித் * திகழ்ந்தானை மகிழ்ந்து ஒருகால் *
ஆனாயன் ஆனானைக் * கண்டது தென்னரங்கத்தே 3

வளர்ந்தவனைத் தடங்கடலுள் * வலி உருவில் திரிசகடம் *
தளர்ந்து அதிர உதைத்தவனைத் * தரியாது அன்று இரணியனைப்
பிளந்தவனை ** பெருநிலம் ஈரடி நீட்டிப் * பண்டொரு நாள்
அளந்தவனை * யான் கண்டது * அணிநீர்த் தென்னரங்கத்தே 4

நீர் அழலாய் நெடு நிலனாய் * நின்றானை * அன்று அரக்கன்
ஊர் அழலால் உண்டானைக் * கண்டார் பின் காணாமே **
பேர் அழலாய்ப் பெரு விசும்பாய்ப் * பின் மறையோர் மந்திரத்தின் *
ஆர் அழலால் உண்டானைக் * கண்டது தென்னரங்கத்தே 5

தன் சினத்தைத் தவிர்த்து அடைந்தார் * தவ நெறியை * தரியாது
கஞ்சனைக் கொன்று * அன்று உலகம் உண்டு உமிழ்ந்த கற்பகத்தை **
வெஞ்சினத்த கொடுந்தொழிலோன் * விசை உருவை அசைவித்த *
அஞ்சிறைப் புட்பாகனை * யான் கண்டது தென்னரங்கத்தே 6

** சிந்தனையைத் தவ நெறியைத் * திருமாலை * பிரியாது
வந்து எனது மனத்து இருந்த * வடமலையை ** வரிவண்டார்
கொந்து அணைந்த பொழில் கோவல் * உலகு அளப்பான் அடி நிமிர்த்த
அந்தணனை * யான் கண்டது * அணிநீர்த் தென்னரங்கத்தே 7

துவரித்த உடையவர்க்கும் * தூய்மை இல்லாச் சமணர்க்கும் *
அவர்கட்கு அங்கு அருள் இல்லா * அருளானை ** தன் அடைந்த
எமர்கட்கும் அடியேற்கும் * எம்மாற்கும் எம் அனைக்கும் *
அமரர்க்கும் பிரானாரைக் * கண்டது தென்னரங்கத்தே 8

பொய் வண்ணம் மனத்து அகற்றிப் * புலன் ஐந்தும் செல வைத்து *
மெய் வண்ணம் நினைந்தவர்க்கு * மெய் நின்ற வித்தகனை **
மைவண்ணம் கருமுகில் போல் * திகழ் வண்ணம் மரதகத்தின் *
அவ்வண்ண வண்ணனை * யான் கண்டது தென்னரங்கத்தே 9

** ஆ மருவி நிரை மேய்த்த * அணி அரங்கத்து அம்மானை *
காமரு சீர்க் கலிகன்றி * ஒலி செய்த மலி புகழ் சேர் **
நா மருவு தமிழ் மாலை * நால் இரண்டோடு இரண்டினையும் *
தாமருவி வல்லார் மேல் * சாரா தீவினை தானே 10

**அடிவரவு:** கைம்மானம் பேரானை ஏனாகி வளர்ந்தவனை நீர் தம் சிந்தனை துவரித்த போய் ஆமருவி பண்டை

**திருமங்கையாழ்வார் திருவடிகளே சரணம்**

---